உ

கடவுடுணை.

# சனீச்சுரத் தோத்திரக் கண்ணி.

இஃது

தஞ்சைமா நகரம்
கிருஷ்ணசாமி வைத்தியர் குமாரர்
ஆயுள்வேத சோதிட நூற்பண்டிதர்
நாராயணசாமி வைத்தியரால்
இயற்றப்பட்டு,

தஞ்சையைச்சார்ந்த கொத்தட்டை ஆலங்குடி
மகா-ள-ள-ஸ்ரீ
சி. குழந்தைவேலு பிள்ளையவர்கள்
முயற்சியால்,

தஞ்சை
"பூரணச்சந்திரோதய அச்சியந்திரசாலையிற்"
பதிப்பிக்கப்பட்டது.
1899.

*Copy Right Registered.*



சனிச்சுராமூர்த்தி.

## கலிவிருத்தம்.

தனியனாகியுந் தன்னைவாழ்த்திடார்க், கனியனாகியும் அன்பராகுவார்க்
இனியனாகியும் எந்தையாயுறுஞ், சனியனாருட்டன்மை நன்மையே.

# முகவுரை.

அகிலலோக சஞ்சார ஆன்மாக்கள் அனுபவித்தற்குரிய சுகதுக்கங்கள் அவரவர்கள் கன்மத்துக்கு ஈடாக என்பதும் இப்பரதகண்டத்து யாவரும் ஒப்பியதோர் உண்மை அவர்களே அநுபவங்கள் ஜெனனகாலத்தை யொட்டிய கிரகசார திசாபுத்திபலன்கள் என்பர். இதனால் கன்மானுசார அநுபவங்கள் எவர்க்கும் பொருந்துமாற்றிற்கியைந்த காலமே ஜெனனகாலமாக அமையுமென்பது நாட்டப்பட்டது. (பேறழிந்த இழவும், இன்பமற்ற துன்பமும், மூப்பு கெட்ட சாக்காடும்,) ஒருவர்க்கெய்துங்கால் அவன் இவன் சனியாலாட்டப்படுகிறான் எனப்படுவது சகசம். சனிப்பிரீதி சாந்திகள் துன்பமொதுங்கவும் இன்பநெருங்கவுமியற்றுமவைகள் என்பதும் ஆன்றோர் துணிபு செய்த தீவினை செய்தவர்க்கெய்திடாமுன் சனிப்பிரீதி சாந்திகள் புரிதல் அத்தீவினையை வெல்லுமாறு என்பதில் அற்பமேனுஞ் சந்தேகமே வேண்டியதில்லை. நானும்மிகப்பட்டேன் துக்கமுற்றேன் பின்பு சனீச்சுரன் தோத்திரமாக இந்நூலையியற்றித் துதித்தேன் துன்பமற்று இன்பம் பெற்றவனானேன் ஆகையால் அவ்விதமேயாவரும் சனீச்சுரத்துதியாம் இப்பாக்களையோதி அப்பகவான் பிரீதியால் இன்பமேபெறவேண்டுமென்ற அவாவால் அச்சியற்றலானேன் இந்நூலை வாங்கிப் படிப்போர் கேட்போர் யாவரும் நீடூழிவையத்து வாழ்வாங்கு வாழ்வார்கள்.

# சிறப்புக்கவி

தஞ்சாவூர்
சதாவதானம் பிர்ம்மஸ்ரீ
## சுப்பிரமணிய ஐயரவர்கள் சொல்லியது.

### அறுசீர்க்கழி நெடிலடி ஆசிரிய விருத்தம்.

உலகமெல்லா மொளிவிரிக்கு முதையவனுக் கொருமகனு யுதித்தமேற்கோள், வலமிகுதோ ளிணைக்கிணையத் தோத்திரப்பாமாலையொன்றை வணைந்தான் றஞ்சைத், திலகமென வருநாரா யணசாமி பண்டிதன்றான் செப்புமஃதைப், பலமுறையும் படிப்பவர்பாற் பலமுறையும் நலமுறையும் பண்பின் மாதோ.

---

தஞ்சை
சென்ற் பீட்டர்ஸ் காலேஜ்
தமிழ்ப்பிரதமபண்டிதர்
## ஸ்ரீ. க. சிவசுப்பராயபிள்ளையவர்கள்
இயற்றிய

### நிலமண்டில ஆசிரியப்பா

பூமகிழ்பொன்னுந் நாமகிழ்மின்னும்
ஓவாதென்றும் மேவாநின்றும்
நதிதடநிலைப்பெயர் நாமமும்பெற்ற
பதியெனச்சான்றோர் முதுமொழிபுதுக்கிய
செஞ்சொற்புலவரும் விஞ்சியகலைஞரும்
எஞ்சாச்செல்வரு மிடையறுத்தஞ்சையில்
எவர்களுமன்பா யியையமேலோனெனுந்

தவர்புகழ்நாமந் தருந்தகுமிவற்கெனப்
பனிப்பகைசேயாஞ் சனிப்பகைதன்னால்
நனித்துயருழந்து தனிப்பதியகன்று
[illegible]ழல்பவன்பகைஞன் கழல்புகனலமென
அழன்மெழுகொப்ப விளகியமனத்தனாய்
அறிந்தவன்மீதே யலர்தொடைபழுதாம்
செறிந்தபாமாலை சிறப்பெனத்தொடுத்தப்
புனைந்தவனருளாற் புகுந்துதன்பதியில்
இனைந்ததுன்பகன் றின்புற்றவன்யான்
பெற்றவின்பினுநீர் பெறுமுலகிலெனச்
சொற்றுதவினன்பல சொல்வதிற்பயனென்
உடலு[illegible]ர்ப்பிணிகளை யுரன்றொன்னலனென
அ[illegible]ன்[illegible]ப்பொருளு மமைந்தபண்டிதனே.

---

அண்ணப்பன்பேட்டை
ஸ்ரீ தாயுமான சு[illegible]மிகள்
ஆதினகர்த்தராகிய
## ஸ்ரீ சபாபதிதாயுமானசுவாமிகள்
இயற்றிய,
### அறுசீர்க்கழி நெடிலடி ஆசிரிய விருத்தம்.

அஞ்சையடர்த் தாறினரு நட்புவிழை யம்பொன்மணி மாடமார்ந்த, தஞ்சைநக ருறைநாரா யணசாமித் தரணியெனுந் தகைமைவாய்ந்தோன், மஞ்சைநிறஞ் சிதமாக்குங் கொடிக்கொடியான் பிரதாபமலர்நா ரன்பான், விஞ்சைதிருப் பெறவணிந்தா னவன்புயத்தி லஃதெவரும் வியக்கற்பாற்றே.

---

மாயூரம் ஸ்ரீ ஐ, மாயூரநாத தேசிகர் அவர்கள்
இயற்றிய

அறுசீர்க்கழி நெடிலடி ஆசிரிய விருத்தம்,

பெருந்தராதலமிடிநோய் தன்கலிநோயொடுசேணுவிற்
பேரும்வண்ணந்
திருந்துசே. இட மதனுற்றோர்ந்துசனிப் பகவனருள்
சேர்தனல்ல
மருந்தலது வேறிலையென்றன்னவன்மேற் றோத்திரப்பா
வனைந்தான்றஞ்சைப்
பொருந்துறு நாராயணசாமிக் கவிஞன் புகழைஎவர்
புகழாரம்மா.

---

புதுக்கோட்டை சமஸ்தானம்
மாஜி ஸ்கூல் டிப்டி இனிஸ்பெக்டர் POET LAUREATE
மகா-௱-௱-ஸ்ரீ R. உலகநாதபிள்ளை அவர்கள்
இயற்றிய,
எண்சீர்க்கழி நெடிலடியாசிரிய விருத்தம்.

தேவர்முதலியாவரையுந் தனுதுகண்ணிச்
சிக்கினிலிட்டாட்டு மதிகாரிதன்னைப்
பாவருகண்ணியிற் படுத்துத் தனதபீஷ்டப்
படியுதவ விப்படியப்படியே யெய்த
மேவரிய கொம்புத்தேன் முடவனுக்கு
மேவியதென்னக்கனிவாய் மேவச்செய்தான்
மாவருளார்ந் திருநாராயணசாமிப்பேர்
மருவிய பண்டிதக் கணிதவல்லோன் மாதோ.

---

## தஞ்சை
## ஸம்ஸ்கிருத காலேஜ்
முநிசியாயிருந்திப்போது சுகவாசியாயிருக்கிற
## மகா-ள-ள-ஸ்ரீ கோதண்டராம உபாத்தியாயர்

### அவர்கள் இயற்றிய அறுசீர்க்கழி நெடிலடி ஆசிரிய விருத்தம்

விண்மேழுனோர் கடனுர மேவிநா ராயணப்பேர் விளங்கப் பெற்றான், பண்டுளோ ரப்பெயரைத் தனக்கிட்ட பான்மைக்காய்ப் பாலு நெய்யும், மண்டுவைத் தியசோதி டக்கடலை நீந்திசனி மான்மிய மென்னுங் கண்டேகடன்னின்றுகண்ணி பாடிப்பேர் விளக்கினான் கருத் தான் மாதோ,

---

## தஞ்சாவூர்
## எஸ்-பீ-ஜீ போர்ட்ஸ்கூல்
## தமிழ் முநிசி மகா-ள-ள-ஸ்ரீ இராமையாவஸ்தாது

### அவர்கள் இயற்றிய நேரிசை வெண்பா.

பொன்னே மணியோ புலவர் சிகாமணியோ
என்னே வுவமை யியம்புவேன், இன்னருள்சேர்
நாரா யணசாமி நற்றமிழ்ப்பாச் சூட்டினனால்
காரார் கதிர்சேய் கழற்கு.

---

உ

கடவுடுணை.

# சனீச்சுரத்தோத்திரக்கண்ணி.

## விநாயகர்காப்பு.

வெண்பா.

பூமேவு பல்லுலகும் போற்றுஞ் சனீச்சுரன்மேற்
பாமேவு தோத்திரங்கள் பாடவே—மாமேவு
தஞ்சைக் குணவாயில் தங்கும்வெள்ளைக் குஞ்சரத்தின்
கஞ்சமலர்ச் செஞ்சரணே காப்பு

## நவக்கிரகத்தோத்திரம்.

வெண்பா.

சீரா ரிரவிமதி சேய்புதன்பொன் சுக்கிரனே
டேரார் சனிராகு கேதுவெனப்—பேராரு
மொன்பான் கடவுளர்தா ளுள்ளத் திருத்தினிட
ரென்பாற் புகுமோ வினி

## சனீச்சுரத்தோத்திரம்.

வெண்பா.

ஏத்தல்செய் வார்களுக்கே யெண்ணில் சுகங்கொடுத்துக்
காத்தல்செயுங் காரிக் கடவுளே—பூத்தவிட்சி
மாலை யணிந்தவுன் றன் வாகிடையான் சூட்டுகவி
மாலை யணிந்தருளு வாய்

## கண்ணிகள்,

கார்மேகம் போலக் கதித்தவெழின் மேனியனே
பார்மே லுனைத்தொழுதேன் பாலன் சனீச்சுரனே (க)
காரியழ கையா கருங்காக்கை வாகனனே
சீரியநிற் பாடத் தெரியேன் சனீச்சுரனே (உ)
சேடனு வாலெடுத்துச் செப்பவரி தாகுமெனின்
மூடனே நின்சீர் மொழிவேன் சனீச்சுரனே (ங)
கற்றறியாப் பேதையேன் காமுற்றே துங்கவியிற்
குற்றமுற்றி டிற்குணமாக் கொள்வாய் சனீச்சுரனே (ச)
கண்டறியே னுன்னைக் கருதறியேன் கண்டபின்செய்
தொண்டறியேன் வாழ்த்தறியேன் றூயா சனீச்சுரனே (ரு)
வழுத்தவரும் பன்னூலு மாசறக்கற் றோர்முன்
னெழுத்தறியேன் பாட வியைந்தேன் சனீச்சுரனே (சா)
நன்னயமி லாவிடினு நாவலர்க ணின்பேரிற்
சொன்னகவி யென்னநவை சொல்லார் சனீச்சுரனே (எ)
பணத்தோர் படியார்சு வாநுபவத் தோர்முற்
குணத்தோரிந் நூலைக்கைக் கொள்வார் சனீச்சுரனே (அ)
கருந்தாளம் மண்மகிழுங் காந்தாவென் கண்முன்
னிருந்தாள வேண்டு மிறைவா சனீச்சுரனே. (கூ)
மணியொளியுந் தேன்சுவையு மாமலர்வா சப்போ
லணியொளியா யெங்கு மமர்ந்தாய் சனீச்சுரனே (ய)
ஐயுருவின் மூவுருவி னப்பாலொன் றூமுருவின்
மெய்யுருவாய் நின்று விளங்குஞ் சனீச்சுரனே (யக)
சின்மயமு ஞேமயந்தே ஜோமயம்வி ஞ்ஞானமயந்
தன்மயமு நின்மயத்தே தங்குஞ் சனீச்சுரனே (யஉ)
பூதலத்தும் பாதலத்தும் பொற்றலத்தும் மெத்தலத்தும்
மீதலர்த்துஞ் செங்கோல்கொள் வேந்தே சனீச்சுரனே (யங)

மாயையுமா யோனுமுன்றன் மாயைவசை ராஞலுன்
மாயையெவர் கண்டறிய வல்லார் சனீச்சுரனே. (௧௪)

அண்டாண்டத் தப்பாலு மத்தாகீ செய்விஜயங்
கண்டாய்ந் துரைக்கவெவர் கற்றுர் சனீச்சுரனே (௧௫)

அன்றுமுத லிந்நா ளளவுமுன்ற ஞேடெதிர்த்து
வென்றுஜெயங் கொண்டதெந்த வீரர் சனீச்சுரனே (௧௬)

வினையுருவே நின்னுருவாய் மேவுதலா லென்றும்
உனையெவரும் வெல்வசரி துண்மை சனீச்சுரனே (௧௭)

ஈச்சுரன்சண் டேச்சுரன்லங் கேச்சுரன்க வீச்சுரன்கோ
டீச்சுரரு நின்பேர்கேட் டெய்த்தார் சனீச்சுரனே (௧௮)

காணுமிடந் தோறுமுனைக் காணு விடங்களெங்குங்
காணே னருணேக்காற் காணுய் சனீச்சுரனே (௧௯)

தொட்டார் கலியாற் றுறத்தலா லேகலியென்
றிட்டார் பெயருனக்கஃ தேற்குஞ் சனீச்சுரனே (௨0)

நின்றற் றெழின்முடக்க நேருதலா னின்பெயரைச்
சொன்னுர் முடவனெனத் தூயோர் சனீச்சுரனே (௨௧)

அனைத்தினுக்குஞ் சாட்சி யதாய்நிற்ப தாலே
யுனைக்கரியோ னென்ன வுரைப்பார் சனீச்சுரனே (௨௨)

நீலமே கம்போ னிறம்பெற் றிருத்தலினு
னீலனென்றுங் காரியென்று நேர்ந்தாய் சனீச்சுரனே (௨௩)

முதியோ னெவர்க்குமுன் ஞேனுதல் தோன்ற
முதுமகனீ யென்ன மொழிவார் சனீச்சுரனே (௨௪)

மந்தனென்னு நாமம்ஸ்ரீ மந்தனுஞ் சௌரியென
வெந்நைதகே சத்தி னெழிலாற் சனீச்சுரனே (௨௫)

ஜீவர்கள்செய் புண்யபவச் சேர்க்கையைப்பங் கிட்டிரண்டிங்
கீவதனுற் பங்கெனப்பே ரீந்தார் சனீச்சுரனே (௨௬

மேற்கோ ளெனல்விளங்க நின்பெயரோ மேற்கோளா
மேற்கோ ளெனவுரைத்தார் மேலோர் சனீச்சுரனே. (௨௭)

நோயையுண்டு பண்ணுதலா னேய்வளர்த்து நோய்செயலா
னோய்முகனென் றுன்பேர் நுவல்வார் சனீச்சுரனே (௨௮)

மருத்துவர்நின் பேர்நோயை மாறுதலா லொற்றைப்
பொருத்திசன்னி யென்றே புகல்வார் சனீச்சுரனே (௨௯)

குஷ்டஞ் சயங்காசங் குன்ம மகோதரமா
கஷ்டக் கவிசையுன் றாற் காணுஞ் சனீச்சுரனே (௩0)

சூலைகை காலிசிவு சோர்வு பிளவைகண்ட
மாலையந்தி மாலைநின் றுன் மன்னுஞ் சனீச்சுரனே (௩௧)

மூலம் பகந்தரமா மூர்ச்சைமார் புள்வலிக
பாலம் புடைசணின் றாற் பற்றுஞ் சனீச்சுரனே (௩௨)

தாள்வாதம் பக்கவதஞ் சம்புத் தலைவாதந்
தோள்வாத மெல்லாநிற் றோன் றுஞ் சனீச்சுரனே (௩௩)

வலிப்பதிது லம்பாத வன்மீக மண்டக்
கலிப்புநோ யுந்நிற் கதிக்கும் சனீச்சுரனே (௩௪)

தாய்நீவா தங்களுக்குத் தந்தைபித் தங்களுக்கைக்
காய்குருதொந் தங்களுக்கை யாவாய் சனீச்சுரனே (௩௫)

தொட்டார்க்குத் துன்பந் தொடர்ந்தியற்ற லம்முடிந்து
விட்டார்க்கின் பந்தரலுன் வேலை சனீச்சுரனே (௩௬)

ஐயநின் றன்குகரத் தங்கபா லஞ்சூலம்
வெய்ய டமருகம்வின் மேவும் சனீச்சுரனே (௩௭)

வெருவல்விப ரீதமிசல் விக்கினமஞ் ஞானந்
தெருமரலு நல்குரவுன் சேனை சனீச்சுரனே (௩௮)

ஆலசியஞ் சோர்வுநவை யாகுலம்வஞ் சம்மிழிவுந்
தாலநடுங் கச்செலுநின் றானை சனீச்சுரனே (௩௯)

தற்புத்தி யீரிஷைப சூயையகங் காரமொடு
தர்ப்பமு நின்றனைத் தலைவர் சனீச்சுரனே (௪௰)

மாச்சரியம் டம்பம் மதமா னவநான்கும்
ஆச்சரிய மாநின் னமைச்சர் சனீச்சுரனே (௪௧)

கோபங் கொலைகளவு கோட்சூது கட்காமம்
பாபம் பழியுன் படையாம் சனீச்சுரனே (௪௨)

வினைவீர நீகால வில்விற்றீவ் காநாண்
டனைத்தொடுத்தல் லற்கணைக டாக்குஞ் சனீச்சுரனே (௪௩)

வைத்தகுறி நித்தியபிர் மத்தைவிட்டு மற்றவைத்
தைத்துருவு நின்சரங்க டப்பா சனீச்சுரனே (௪௪)

கோலநின்கட் [illegible]ாங்கைக்குக் குன்றுமெழு காயுருகும்
ஆலம் வடவைதண் ணென்றுமே சனீச்சுரனே (௪௫)

ஏழ்பாரு மேழ்காரு மேழ்நீரு மேழ்தீவும்
பாழ்படுமே நீமுனிந்து பார்த்தாற் சனீச்சுரனே (௪௬)

இடியெனனின் கைப்படையி விற்ற தண்டந் தானிப்
படியினில்வீழ் கின்றதென் றென் பட்சம்சனீச்சுரனே (௪௭)

அசனியென வுன்னை யறிவுடையோர் சுட்டி
வசனிக்கும் பேரிடிக்கு வாய்த்த சனீச்சுரனே (௪௮)

உன்விளையாட் டாலேமுன் ஞானமுற்ற பேர்களின்னு
மென்விளையு மோவென் றிடைவார் சனீச்சுரனே (௪௯)

செவ்வியநீ செய்த திருவிளையாட் டின்றொகையை
யிவ்வளவென் றோதவென்னா லேலா சனீச்சுரனே (௫௰)

பலவாநீ செய்திருக்கும் பாலவிளை யாட்டிற்
சிலவாயிக் நூலி லுரை செய்வேன் சனீச்சுரனே (௫௧)

சித்தி விநாயகர்தஞ் செவ்வி முகமாறி
யத்திமுகம் பெற்றதுன்னா லன்றோ சனீச்சுரனே (௫௨)

தும்பிமுக மீதின்மதித் துண்டமென வேவயங்குங்
கொம்பிலொன்றன் றற்றதன்றன் கூத்தே சனீச்சுரனே (௫௩)

குருவடிவாய் நின்ற குமரனையும் வேங்கைத்
தருவடிவாய் நிற்கச் சமைத்தாய் சனீச்சுரனே (௫௪)

இமையகற் றும்மதுரைச் செட்டிக்கச் சண்முகனை
யூமைச்சே யாயுதிக்க வுய்த்தாய் சனீச்சுரனே (௫௫)

பிரமன் றனக்கியல்பாப் பெற்றதலை யைந்துட்
சிரமொன் றறுபடவுஞ் செய்தாய் சனீச்சுரனே (௫௬)

படைக்குந் தொழினிறுத்திப் பன்னாட் சிறையி
லடைக்கும் படிபுரிந்தாய் ஐயா சனீச்சுரனே (௫௭)

நித்தியவை குந்தமதை நீங்கிநெடு மாலுலகிற்
பத்துமுறை வந்துதிக்கப் பார்த்தாய் சனீச்சுரனே (௫௮)

பூவையா சிக்கப் புகுமுகில்போல் வாமனனை
மாவலிபாற் சென்றிரக்க வைத்தாய் சனீச்சுரனே (௫௯)

தாரணியைத் தாசரதி தாங்கமுடி சூடுமுன்னே
யாரணியஞ் செல்ல வமைத்தாய் சனீச்சுரனே (௬௰)

கானகத்திற் சென்றுங் கனிகாய் கிழங்கயின்றுஞ்
சானகியை நீங்கவுஞ்செய் தாயே சனீச்சுரனே (௬௧)

கட்டியணை யாய்ச்சியராற் கண்ணன் றனையுரலிற்
கட்டிய டித்திடவுங் கண்டாய் சனீச்சுரனே (௬௨)

பித்தனென்றும் பேயனென்றும் பேர்சுடலை யாடியென்றுஞ்
சுத்தசம்பு வைச்சொலவுந் தொட்டாய் சனீச்சுரனே (௬௩)

சொக்கர் திருமுடிமேற் றன்னும்விற கைச்சுமந்து
விற்கும் படிக்குநீசெய் வித்தாய் சனீச்சுரனே (௬௪)

மால்சுமந்த சேவகர்மெய் மண்சுமந்தும் பாண்டியன்கை
கோல்சுமந்து நோய்சுமக்கக் கூர்ந்தாய் சனீச்சுரனே (௬௫)

மீனாட்சி சுந்தரனை மீன்பிடிப்போ னாக்கிவிரு
மீனைப் பிடிக்கவரு வித்தாய் சனீச்சுரனே (௬௬)

மண்ணைச் சுமக்கறியா மாதேவ னுக்கிரண்டு
பெண்ணைச் சுமக்கவைத்தாய் பின்னுஞ் சனீச்சுரனே (௬௭)

எல்லாருந் தன்னையிறை யென்றிறைஞ்சச் சங்கரனைக்
கொல்லவெண்ணி நஞ்சளித்தாய் கொல்லோ சனீச்சுரனே (௬௮)

மண்சுமக் கும் வேலைகுற்ற வாளிக்கிடு வார்போல்
மண்சுமக்கச் சேடனையும் வைத்தாய் சனீச்சுரனே (௬௯)

துங்கமிகு மிந்திரற்குத் துள்ளுமான் புள்ளியைப்போ
லங்கமெல்லாங் கண்ணா யளித்தாய் சனீச்சுரனே (௭௦)

அன்றுபர மன்விழியி னாலெரிவித் தங்கசனை
என்றுமனங் கன்னெனப்பே ரீந்தாய் சனீச்சுரனே (௭௧)

முந்நீர்முற் றுண்ட முநியைப் பொதியவரை
தன்னி லடைந்திடக்கண் சாய்த்தாய் சனீச்சுரனே (௭௨)

காலன் புழுக்காலுங் காலனென வும்பரமன்
காலா லுதைபடவுங் கண்டாய் சனீச்சுரனே (௭௩

தக்க மகம்புரிந்த தக்கனுக்கா ட்டுத்தலையே
தக்கதெனத் தந்தபுகழ் தக்கோய் சனீச்சுரனே (௭௪)

வெண்கதிர்க்குஞ் செங்கதிர்க்கும் மெய்கெடவும் பற்கெடவுங்
கண்கெடவுஞ் சுக்கிரற்குக் கண்டாய் சனீச்சுரனே (௭௫)

தாயா முமையைமலை தக்கன்மறை யோன்கலைஞன்
சேயாய்ப் பிறந்திடவுஞ் செய்தாய் சனீச்சுரனே (௭௬)

கற்பின் மகளிர்போற் காளி தலைகுனிந்து
நிற்பதற்குக் காரணமு நீயே சனீச்சுரனே (௭௭)

சீதை வனத்திற் சிறையிருக்கப் பாஞ்சாலி
மாதைத் துகிலுரிய வைத்தாய் சனீச்சுரனே (௭௮)

நல்லுருவாய் மேவியசீர் நாரி யகலிகையைக்
கல்லுருவாய்ச் செய்ததுநீ கண்டாய் சனீச்சுரனே (௭௯)

எந்நிலமும் போற்று மிரணியற்கன் றன்மகனை
முன்னிலையாய் வைத்து முடித்தாய் சனீச்சுரனே (௮0)

அண்டர்கள்வாழ் நாளையெலா மங்கைச்சு லத்தாற்கோர்த்
துண்டகும்ப கர்ணனைநீ யுண்டாய் சனீச்சுரனே (௮௧)

இத்திரனை வென்ற விராவணிதஞ் சென்னிதனைத்
தந்திரமாய்ப் போகத் தறித்தாய் சனீச்சுரனே (௮௨)

மூலபலச் சேனை முடிந்ததற்குக் காரணமுன்
காலபல மென்றெவருங் காணார் சனீசசுரனே (௮௩)

இராவணமெய் யுற்றபல்வி ராவணரைப் பூமியிலி
ராவணமாய்ச் செய்தரண ராயா சனீச்சுரனே (௮௪)

தாருகன்வி ருத்திரன்ச லந்தரன்சீர் சால்மகிடா
சூரன்முத லோரைத் தொலைத்தாய் சனீச்சுரனே (௮௫)

பேரிடையி லோரெழுத்தைப் பின்னியுரு மாற்றிமுனஞ்
சீர்கௌர வர்குலத்திற் சென்றாய் சனீச்சுரனே (௮௬)

துட்டதுரி யோதனனுஞ் சோதரருஞ் சூழ்ந்தோருங்
கட்டழிந்து பட்டுருளக் கண்டாய் சனீச்சுரனே (௮௭)

முன்பா லெவருமிலா மொய்ம்புடைய வாலியையோ
ரம்பான் மடித்ததுன்ற னாற்றல் சனீச்சுரனே (௮௮)

அங்குமின்றி யிங்குமின்றி யந்தரத்தில் வந்துதிரு
சங்குமன்னன் றங்கிடச்செய் தாயே சனீச்சுரனே (௮௯)

பஞ்சவர்க ளுடிழந்து பஞ்சைகள்போ லேவனத்திற்
பஞ்சாய்ப் பறந்திடவும் பார்த்தாய் சனீச்சுரனே (௯0)

சந்த்ரமதி வாழ்பதிபோய்க் காசிபோய்த் தான்விலைபோய்
மைந்தனும்போ யீமமுற வைத்தாய் சனீச்சுரனே (௯௧)

திட்டுண்டுங் குட்டுண்டுஞ் செய்கொன்றுண் கள்ளியெனக்
கட்டுண்டும் வெட்டுண்ணக் காத்தாய் சனீச்சுரனே (௯௨)

பெண்டாட்டி சேயைவிற்ற பின்னுமரிச் சந்திரனைச்
சண்டாளற் காளாச் சமைத்தாய் சனீச்சுரனே (௯௩)

மாவிந்த மாநகராள் மன்னனள னைப்பிடிப்பான்
நீவெந் துயரடைந்து நின்றாய் சனீச்சுரனே (௯௪)

மீண்டுவெந் தூந் தான்றிமர மீதிலுற்று நீபனிரண்
டாண்டுநவ சோற்றனையே யையா சனீச்சுரனே (௯௫)

சோர்ந்தசம யமநளனைத் தொட்டவுடன் புட்கரனைச்
சேர்ந்துகவ றாடிடவுஞ் செய்தாய் சனீச்சுரனே (௯௬)

சூதாடி யாவுநளன் றோற்றுதம யந்தியொடும்
வாதாடிக் கான்புகவும் வைத்தாய் சனீச்சுரனே (௯௭)

வானவர்கோ னைத்தொடர்ந்த மாபா தகத் துருப்போல்
நீநளன்பின் சென்றாய் நிழலாய் சனீச்சுரனே (௯௮)

அங்கவர்பாழ் மண்டபத்தி லன்றிரவி லாதுலர்போற்
றங்கிடவுஞ் செய்ததுநீ தானே சனீச்சுரனே (௯௯)

அன்றவ் விருவ ரவாவைநிறை வேற்றவந்து
நின்றவன்ன மென்னவெதிர் நின்றாய் சனீச்சுரனே (௧00)

ஓர்துகிலைத் தானே யுடுத்தி யிருவருமற்
றோர்துகிலாற் பற்றவும் பருற்றாய் சனீச்சுரனே (௧0௧)

அன்னவடி வாகவும்வந் தன்னோன் றுகில்பறித்த
பின்னரும்வாள் போலுருவம் பெற்றாய் சனீச்சுரனே (௧0௨)

அவ்வா ளெடுத்துமனை யாடுகிலை யீர்ந்துடுக்க
வெவ்வாறு சிந்தைநளற் கீய்ந்தாய் சனீச்சுரனே (௧0௩)

சேர்ந்தமெய்யைய விடடேமன் ஜீவனைப்பி ரிப்பதுபோல்
வேந்தனள னைப்பிரிந்து விட்டாய் சனீச்சுரனே (௧0௪)

காமன்ரதி காமனளன் காமருக்குக் காமுறுமப்
பூமனெழி னஞ்சாற் புதைத்தாய் சனீச்சுரனே (௧0௫)

மன்னனுக்கு மன்னனள னன்னமடும் வேலெரிறு
பன்னனுக்குப் பண்ணவு நீ பார்த்தாய் சனீச்சுரனே (௧0௬)

பாகத் தொழிலேற்றுப் பார்த்தநளற் கவ்விடந்தேர்ப்
பாகத் தொழிலும்பணித்தாய் (௧0௭)

வந்தெதிரிற் றோன்றிபதன் மக்கண்மேற்காதனளன்
சிந்தைதடுமாறிடவுஞ் செய்தாய் (௧0௮)

மையிருளின் மொய்வனத்திலேபனளற் கைபகன்று
தையன்மிக வெய்துயிர்க்கச் செய்தாய் சனீச்சுரனே (௧0௯)

தானே புலம்பித்தவித்துதம யந்தியுமென்
கோனேவா வென்றலறக்கூர்ந்தாய் சனீச்சுரனே (௧௧0)

விண்மதியைக் கேதுவண் விதம்போற் றமயந்திப்
பெண்மதியைப் பாம்பாய்ப்பிடித்தாய் சனீச்சுரனே (௧௧௧)

வீமன்மகள் கற்பழலால் வேடனைநீ றுக்கியபின்
வீமநகர் நோக்கிடவும் விட்டாய் சனீச்சுரனே (௧௧௨)

இன்னதன்மை யாகவின்னு மெத்தனையோ பேர்களுன்றுல்
வின்னமுற்றுத் துன்பமுற்றும் வீந்தார் சனீச்சுரனே (௧௧௩)

தேவ ரசுரர்முநிசித்தர்நா கர்நரற்குள்
யாவரைத்தான் விட்டாயாட் டாமற் சனீச்சுரனே (௧௧௪)

பாலவிளை யாட்டேயிப் பான்மையெனினுப்தியற்றுங்
கோலவிளை யாட்டுரைக்கக் கூடா சனீச்சுரனே (௧௧௫)

நின்யுகத்தை யாயிரவாண் டென்பதுவு நேர்ந்ததினி
என்னியற்ற மண்ணைநின தெண்ணஞ் சனீச்சுரனே (௧௧௬)

தேண்மதியிற் றேண்மனையிற் றேவாநின் றேடேழு
கோண்மருவும் போதென்ன கூத்தோ சனீச்சுரனே (௧௧௭)

காலனென்றுங் காரியென்றுங் காளியென்றும் யாரையுநீர்
மூலஞ் செயுமவருண் மூன்பா சனீச்சரனே (௧௧௮)

இன்னும் பலமைந்த ரிருக்கவுங்கண் மூவரையு
மென்னதவஞ் செய்தருக்க னீன்றார் சனீச்சரனே (௧௧௯)

கொல்லுந் தொழிலிருவர் கொண்டார்நீ கொல்லாமற்
கொல்லுந் தொழில்களைக்கை கொண்டாய் சனீச்சரனே (௧௨௦)

உன்குடைக்கீழ்ச் சுட்டுண் டுறைதலினு மற்றிருவர்
தன்குடைக்கீழ்ச் சென்றிடன்மேற் றுணுஞ் சனீச்சரனே (௧௨௧)

உருவவதி காரமுனக்குமுன தண்ணற்
கருவவதி காரமுமோ வாட்சி சனீச்சரனே (௧௨௨)

ஆதி விசாரணைநின் னுலான பின்புனது
சோதரன்பாற் போக்கலிது தொன்மை சனீச்சரனே (௧௨௩)

காசைப் பறித்தோட்டைக் கைக்கொடுத்த லானுனைத்தூர்
வெசைக்கொப் பாயுரைக்க வேண்டுஞ் சனீச்சரனே (௧௨௪)

முன்புசுகம் பின்புதுக்க மோகினியாற் சேருமின்னுற்
பின்புசுக முன்புதுக்கம் பேரும் சனீச்சரனே (௧௨௫)

தீயவழிப்-பொன்களையத்-தீயர்கைக்-கொள்ளுவர்நீ
தூயவழிப் பொன்னுந் துடைப்பாய்ச் சனீச்சரனே (௧௨௬)

மின்னுள் கவர்ந்தபொருண் மீளாதென் றும்மொருக்கா
லுன்னூற் கவர்ந்தால்பின் புண்டாம் சனீச்சரனே (௧௨௭)

பேய்பிடிக்து நாய்பிடிக்கும் பேன்பிடிக்கு நீபிடிக்கி
னேப்பிடிக்கும் வாய்பிடிக்கு நொய்திற் சனீச்சரனே (௧௨௮)

வாசநகர் வாசமா வாசமெலாம் போமுனது
வாசமுறச் சேருமுப வாசஞ் சனீச்சரனே. (௧௨௯)

நற்புத்தி யைக்குறைப்பாய் நாளுமுயி ரைக்கரைப்பாய்
பொற்புக் களைமறைப்பாய் போந்தாற் சனீச்சரனே (௧௩௦)

சித்தங் கலைத் திடவுந் தேக மிளைத்திடவுங்
முற்றம் முளைத்திடவுங் சொல்வாய் சனீச்சுரனே (௧௩௧)

தூக்க மொழியாத் துயரொழியாச் சோம்பொழியா
ஏக்க மொழியாம லீவாய் சனீச்சுரனே (௧௩௨)

அஞ்சத் தகுங்குணமு மார்ந்தவறி வின்மருளும்
நெஞ்சத் துடிப்புமுன்னால் நேரும் சனீச்சுரனே (௧௩௩)

ஈனத் தொழில்களெலா மீடேறு நின்வலியான
மானத் தொழில்களெலா மாறும் சனீச்சுரனே (௧௩௪)

மறதி யடிக்கடிக்கு வாய்பிதற்ற லுன்னாற்
பிறதியக்க மெல்லாம் பெருகும் சனீச்சுரனே (௧௩௫)

கோபத்தை யென்மேற் கெடுத்துப் பலவிதமாம்
ஆபத்தின் மாட்டி யலைப்பாய் சனீச்சுரனே (௧௩௬)

விரயப் படுத்திடபின் விஞ்சுசொத்தை யீனக்
கிரயப் படுத்துவைநீ கிட்டிற் சனீச்சுரனே (௧௩௭)

மெய்யைப்பொய் யாக்கி விடுவதுட னேயிமைப்பிற்
பொய்யைமெய் யாகப் புணர்ப்பாய் சனீச்சுரனே (௧௩௮)

கைக்குவந்த தென்னக் கருதும் பயன்களெலாம்
பொய்க்குவந்த தென்னப் புரிவாய் சனீச்சுரனே (௧௩௯)

சமையத் துதவிசெயத் தக்கவரை யெல்லாம்
அமைதியின்றி முன்பே யமைப்பாய் சனீச்சுரனே (௧௪௦)

கேவலமா யைய்யமெங்குங் கேட்டுண்ணும் மாதுலனாக்
காவலராச் செய்வாய் கணத்திற் சனீச்சுரனே (௧௪௧)

புரவலராய் மண்காவல் பூண்டவர்க டம்மை
யிரவலராய்ச் செய்வா யிமைப்பிற் சனீச்சுரனே (௧௪௨)

நீரும்பா லும்போல நேசமுற்ற பேர்களைநீ
மோரும்பா லும்போன் முறிப்பாய் சனீச்சுரனே (௧௪௩)

உயிரைப்போக் காம லுடனிலத்திற் றுன்பப்
பயிரைவிர்த்தி செய்து பறிப்பாய் சனீச்சுரனே (௧௪௪)

எத்தனித்த காரியங்க ளேதுங்கை கூடாமற்
றத்தளிக்கச் செய்து தவிர்ப்பாய் சனீச்சுரனே (௧௪௫)

வான்மறுக்கி னும்மறுக்கா வள்ளலிடங் கேட்கினுநீ
தான்முனம்போய் நின்று தடுப்பாய் சனீச்சுரனே (௧௪௬)

கைப்பொருளெ லாங்கருக்கிக் கைத்தொழிலெ லாஞ்சுருக்கி
மெய்ச்செலவெ லாம்பெருக்கி வீழ்ப்பாய் சனீச்சுரனே (௧௪௭)

பாலும் பழமும் பருகினர்க்குன் றனிலன்னப்.
பாலுமிள காய்ப்பழமும் பஞ்சம் சனீச்சுரனே (௧௪௮)

களிகூ ழுவர்வா க்கஞ்சியனம் பாயசமாச்
சுளியாம லுண்டிடவுஞ் சொல்வாய் சனீச்சுரனே (௧௪௯)

சோளம் வறகாற் சுடுமடைநின் றனுயர்ந்த
போளி யதிரசத்தைப் போலாம் சனீச்சுரனே (௧௫௦)

அன்னங் கலைகளைநீ யண்டினர்க்கில் லாதயன்வாய்
வென்னுமிவர் கட்சேற யீவாய் சனீச்சுரனே (௧௫௧)

கட்டிபதா சைத்துவைத்துக் காயவைக்கி லுன்றனிற்
பட்டியான் கள்வரெலி பங்காம் சனீச்சுரனே (௧௫௨)

தனனிடஞ்சே வித்தவர்பாற் றுன்சே வகனுய்ப்போய்ச்
சென்னி வணங்கிநிற்க ச்செய்வாய் சனீச்சுரனே (௧௫௩)

நிற்கொடுமை யைச்சகிக்க நிர்வாக மற்றவர்க்கு
தற்கொலைகொள் புத்தி தருவாய் சனீச்சுரனே (௧௫௪)

நன்மை பலசெய்து நட்பா யிருந்தவரோ
வன்மைமிகுந் தீமைசெய வைப்பாய் சனீச்சுரனே (௧௫௫)

வேதியர்பா லத்தாநீமேவி லவர்க்குரிய
சாதிவரு ணச்சிரமந் தப்பும் சனீச்சுரனே. (௧௫௬)

எங்கோனீ மன்னரிட மெய்திடிலோ மாருத
செங்கோன் முறைமை திறம்பும் சனீச்சுரனே (௧௫௭)
சிவனினுருப் பண்டாரத் தேசிகரைப் பற்றிற்
பவனனுரு வாய்த்திரியப் பார்ப்பாய் சனீச்சுரனே (௧௫௮)
சைவப் பயிர்வளர்க்குந் தாஷ்டிகரைத் தொட்டாக்காற்
றெய்வக் குறைகள்பல செய்வாய் சனீச்சுரனே (௧௫௯)
வல்லார் விசுவ மரபினரைச் சேர்ந்திடினீ
நல்லார் வழியி னடத்தாய் சனீச்சுரனே (௧௬௦)
தந்திரவா ணீபரைநீ சாரி லமரபக்கச்
சந்திரனும் வர்த்தகத்தின் றன்மை சனீச்சுரனே (௧௬௧)
சூத்திரரை நீசெய் துயரச் சரக்கமைக்கும்
பாத்திரமா கப்புரிதல் பண்போ சனீச்சுரனே (௧௬௨)
பெண்டுசேய் சோதரர்கள் பெற்றோர்நட் போர்கணெஞ்சைக்
கண்டுகொளு நின்னுடைய காலம் சனீச்சுரனே (௧௬௩)
பசுபத் தினிசுதர்கள் பங்குமனை பாழ்நீ
அசுபனு யேழரையாண் டண்ணிற் சனீச்சுரனே (௧௬௪)
வீழ்தல்கை கான்முடக்கு வெட்டுறல்வி லங்குறல்நீ
ஏழரையா ண்டானுய்வந் தெய்திற் சனீச்சுரனே (௧௬௫)
சண்டை வழக்குத் தல்மாற் றகாலவுண
வுண்டே ழரையாண்டா யுற்றாற் சனீச்சுரனே (௧௬௬)
அவதூறு மேலா மதிகாரி கோப
மவமான மேழரையி லாருஞ் சனீச்சுரனே (௧௬௭)
குற்றமுறுந் தீத்தொழில்கைக் கொள்ளல்துற் சங்கமுறூற்
சுற்றவிரோ தம்பலவுஞ் சூழுஞ் சனீச்சுரனே. (௧௬௮)
நெருப்பிடிநீர் பீடையுறு னேரும்வெறுங் காவற்
பொருப்படவி வாசம் பொருந்தும் சனீச்சுரனே (௧௬௯)

கூற்றன்கை யோலை கொடுவருவார் போலுன்னுற்
சிற்றமுடன் சேவகர்கள் சேர்வார் சனீச்சுரனே (௧௭௦)

கரும்பா நினைந்தோர் கசந்துவேம் பென்ன
விரும்பாம லேழைமையின் மீள்வார் சனீச்சுரனே (௧௭௧)

குடும்பக் கலகங் கொடும்பில்லி யேவ
லிடும்பையெலா மேழைமையி லெய்தும் சனீச்சுரனே (௧௭௨)

தேகம் பொருண்மானஞ் சீவனமுஞ் சீவனுஞ்சந்
தேகநீ யட்டமத்திற் சேர்ந்தாற் சனீச்சுரனே (௧௭௩)

மிருகமொடு ஞாதிகள்வர் வேசைகடன் வாதை
வருமேநீ யட்டமத்தில் வந்தாற் சனீச்சுரனே (௧௭௪)

குலவீனஞ் சன்யாசங் கொள்ளன்மனை மக்க
ளலவீ னமுமெட்டி னண்ணுஞ் சனீச்சுரனே (௧௭௫)

தன்மச் சிதைவுகடல் தாண்டுதல்பெண் சேர்க்கையொடு
துன்மரண மும்மெட்டிற் சூழும் சனீச்சுரனே (௧௭௬)

தொழின்முடக்கங் கோட் கலகஞ் சொற்பகைசூ தாற்பொன்
னழிவாமர்த் தாட்டமநீ யார்ந்தாற் சனீச்சுரனே (௧௭௭)

செடிலலகு குத்துதலுச் சேதமரி கண்டம்
முடிவளர்ப்பர்த் தாட்டமத்தின் மூளும் சனீச்சுரனே (௧௭௮)

அவரவர்தாந் தாமேசித் ராக்கினைசெய் தூன்னுற்
றவசியைப்போ லேதிரிதல் சாரும் சனீச்சுரனே (௧௭௯)

ஆடவனைக் கோட்சாரத் தாட்டவிவ்வா றெண்ணிவினித்
தோடமற்ற பெண்கடியர் சொல்வேன் சனீச்சுரனே (௧௮௦)

கற்பழித்தல் கர்ப்ப மழித்தல்கண வர்ப்பழித்தல்
பொற்பழித்த னின்னுற் புகுமே சனீச்சுரனே (௧௮௧)

பெற்றிழத்த லுற்றிழத்தல் பேரிழத்தல் சீரிழத்தல்
பற்றிழத்த லுன்னுளிற் பற்றும் சனீச்சுரனே (௧௮௨)

நாணிழத்தற் பூணிழத்தல் னாடிழத்தல் வாழ்விழத்தல்
ஆணிழத்த லுன்னாளி லுண்டாம் சனீச்சுரனே (௧௮௩)

துட்டியென வுங்கொடிய சூதியென வும்மடங்காப்
பட்டியென வும்பேர் பணிப்பாய் சனீச்சுரனே (௧௮௪)

அலிபோன் றலாவன்மண மாகா திருத்தல்
பொலிவில்செய லெல்லாம் புரிவாய் சனீச்சுரனே (௧௮௫)

அலகைப்பிடித் தாடுதனு ணச்சமற னீங்காக்
கலவியின்மிக் கிச்சையுன்னாற் காணும் சனீச்சுரனே (௧௮௬

மடமிகுதல் தீப்பாய்தல் வந்தியெனல் கேளோ
டுடன்கட்டை யேறுதலு முன்னாற் சனீச்சுரனே (௧௮௭)

தண்ணீரில் வீழ்ந்தும்பை சாசுருவா நீசெய்யும்
பெண்ணீர்மை சொல்லிற் பெருகும் சனீச்சுரனே (௧௮௮)

சுபனு யிருந்திடிலித் துன்பமெலாஞ் செய்யா
துபகரிப்பாய் நற்பலன்க ளூட்டி சனீச்சுரனே (௧௮௯)

மேதகுநன் காமிடநீ மேவிவிட்ட பேர்களெலாஞ்
சாதனச துஷ்டயத்தைச் சார்வார் சனீச்சுரனே (௧௯௦)

அட்டமத்திற் பட்டொழிந்த வஞ்ஞானி யுஞ்ஞானச்
சட்டபூ மிக்கேகத் தக்கார் சனீச்சுரனே (௧௯௧)

நின்னை முறையாண்டு னின்றுவெளிப் படவர்க
டன்னே ரிலாதநல்ல சாது சனீச்சுரனே (௧௯௨)

மந்திரி யுநின்னரசின் மந்திரியா வந்திடிலந்
திந்திரியம் வென்ற வெதியாம் சனீச்சுரனே (௧௯௩)

உதிக்கையிலா றெட்டிலுறுதிசைமேற் காலங்
கதிக்குமந்நா ளைக்கழித்தோர் கர்த்தர் சனீச்சுரனே. (௧௯௪)

துன்பமுன்னே நீயியற்றித் தூயர்களாய்ச் செய்துபின்ன
ரின்பங் கொடுக்கவைய மில்லை சனீச்சுரனே. (௧௯௫)

சாணைபுடத் தான்மணிபொன் றன்மையுயர்தல்போனின்
ஆணையினின் றுப்ந்தோர் அவிர்வார் சனீச்சுரனே (கசுசு)
சீதோட் டினக்கோட்கள் சேர்க்கையினு முன்குணமுஞ்
சீதோட் டினமாத் திகழ்ந்த சனீச்சுரனே (கசுஎ)
பாடும்புல வோர்கணின்னைப் பாடாத தாற்பட்ட
பாடுமிக வுங்கேட்டும் பார்த்தேன் சனீச்சுரனே (கசுஅ)
கம்பர் புகழேந்தி காளமே கம்நின்னை
நம்பவில்லை யென்றே நவில்வேன் சனீச்சுரனே (கசுகு)
சாற்றுந் தமிழ்ப்புலவர் தம்மே லுறுஞ்சினத்தை
மாற்றிச் சுகங்கொடுத்து வைப்பாய்சனீச்சுரனே (உ00)
நல்லபுத்தி மான்களைநீ நாளு விதத்திலும்விட்
டல்லற் படுத்திலொழித் தாள்வாய் சனீச்சுரனே (உ0க)
மிக்கவித்து வான்களைநீ மேம்பா டுறுதளந்தி
கைக்கவிட்டுப் பார்க்காமற் காப்பாய் சனீச்சுரனே (உ0உ)
பணிவாக வுன்னைப் பணிவோர்க் கிரும்பிற்
பணிபூணு வண்ணம் புணிப்பாய் சனீச்சுரனே (உ0௩)
துட்டருக்குஞ் சோரருக்குஞ் சொந்தமுள்ள நின்பணியைச்
சிட்டருக்குப் பூட்டாமற் செய்வாய் சனீச்சுரனே (உ0ச)
தேவரீர் சூடுந் திருவா பரணமதைப்
பாவரோ சூடப் படுவார் சனீச்சுரனே (உ0ரு)
மூவர்முதல் யாவருநின் முன்பரசன் கீழ்க்குடிபோ
லாவரொளி னென்கதியா தாகும் சனீச்சுரனே (உ0சு)
அன்னை பிதாகுருதெய் வங்களும்வெவ் வேறெவர்க்கு
நின்னடியே னுக்கெல்லா நீயே சனீச்சுரனே (உ0எ)
ஆபத்திற் கஞ்சே னடர்வறுமைக் கஞ்சேநின்
கோபத்திற் கச்சமிகக் கொள்வேன் சனீச்சுரனே (உ0அ)
என்னை யொருபொருட்டா யெண்ணுமை னின்பாதந்
தன்னைத் தொழவுதைத்துத் தள்ளும் சனீச்சுரனே (உ0கு)

வேண்டுகோ ளொன்றெமைநீ வின்னப்படுத்தாம
லாண்டுகோ ளீதென்விண் ணப்பம் சனீச்சுரனே (௨௦௰)
காலனிட மாகவெனைக் காட்டிவிட்டா லும்முனது
பாலனுள மச்சப் படுமோசனீச்சுரனே (௨௧௧)
பொய்ப்பிரட்ட னுக்கிலெயனைப் போலீசுக் காரரிடம்
வொப்புவிக்க வேண்டாமீ தண்மை சனீச்சுரனே (௨௧௨)
சிவில்பொருட் டாயெனது செல்வமழிந் தேற்றாலும்
மேவுமா ஜேஸ்திரட்டே வேண்டாம் சனீச்சுரனே (௨௧௩)
ஞானபங்க னென்றுமிந்த ஞாலமிகழ்ந் தாலுமெனை
மானபங்க னென்னுமல் வைப்பாய் சனீச்சுரனே (௨௧௪)
பட்டதுயர்ப் பட்டெனுயிர் பட்டாலுஞ் சீவனின்மேற்
பட்டதுபோ லாவண்ணம் பாராய் சனீச்சுரனே (௨௧௫)
மானவிஷ யத்திலநு மானமுற்ற வென்மேனி
மானம்வைக்கிலி யாவரொன்ச மானம் சனீச்சுரனே (௨௧௬)
மானமதற்கி யாதுமுப மானமில தாலுமவ
மானமுறி லென்னுயிர்தீர் மானம் சனீச்சுரனே (௨௧௭)
உன்றண் டனையெனக்கொன் றேபோது மிவ்வுலகாள்
மன்றண் டனையைமட்டும் மாற்றாய் சனீச்சுரனே (௨௧௮)
சிறைச்சாலைத் துன்பஞ் சிறிதாகு மிவ்வில்
லறச்சாலைக் குட்பட் டடைந்தேன் சனீச்சுரனே (௨௧௯)
அஷ்டமத்தி னீவந் தடிவைத்தநாள் முதலாக்
கஷ்டங்க ளன்றிநலங் காணேன் சனீச்சுரனே (௨௨௰)
மட்டின்றிப் பெய்யும் மழையேறக் கட்டியபோற்
றட்டினையென் செய்தொழில்க டன்னை சனீச்சுரனே (௨௨௧)
தொன்றுதொட்டேச் சோராத் தொழிலரவு கட்டுண்டு
நின்றதுபோ லிந்நாளி னின்ற சனீச்சுரனே (௨௨௨)
சீறுமேற் காற்றுவரத் தென்றனின்று போவதுபோ
லூறுசெய்யிந் நாட்டொழில்க ளோய்ந்த சனீச்சுரனே (௨௨௩)

நாலாறு ரூபாய்முன் னாளிலட்சிய மில்லையின்னாட்
காலணாக்கா லோபுலிப்பால் காணல் சனீச்சுரனே (௨௨௪)
பெண்கள் ருதுமணஞ்சூல் பிள்ளைப்பே றிறுதிவ
சங்கள் வரிசணின்னாட் சத்ரு சனீச்சுரனே (௨௨௫)
கண்ணால் விருந்தினரைக் காணிலிந்நாட் காலனென்றே
எண்ணாத வெண்ணமெந்நெஞ் செண்ணும் சனீச்சுரனே (௨௨௬)
களவுகட்கா மஞ்சூதைக் கற்றோ ரெண்ணம்போலென்
னுளமடிக்க டிக்குமிம்பத் தோடுஞ்சனீச்சுரனே (௨௨௭)
பொழுதெல்லாஞ் சிற்றுதர போஷணைக்கே போக்கிற்
பழுதில் விசாரமென்று பண்ணல் சனீச்சுரனே (௨௨௮)
அடைவாகப் பத்துநாட் காஸ்பதமுண் டென்னத்
திடமிலைநீ தொட்ட தினமா சனீச்சுரனே (௨௨௯)
சுசியாய்ப் புசித்ததெல்லாஞ் சொற்பனமா யிந்நாட்
பசியாய்ப் புசிப்பதெங்கள் பாவம் சனீச்சுரனே (௨௩௰)
பட்சிமிரு கங்களைப் பட்டுண்ணல் போலென்றன்
குட்சிக்கூண் டேடக் குறித்தாய் சனீச்சுரனே (௨௩௧)
இற்றைநா ளெவ்வாறா யேகுமென வுங்கழிந்தாற்
பிற்றைநா ளுங்கவலை போரா சனீச்சுரனே (௨௩௨)
சோற்றுக் கவலைசுய சூரனையும் வீறழிக்கில்
வேற்றுக் கவலையென்ன வேண்டும் சனீச்சுரனே (௨௩௩)
பிராணநிலை யைப்பிடித்துப் பேயாட்ட மாட்டுங்
கிராணம்விடுங் காலமென்றோ கிட்டும் சனீச்சுரனே (௨௩௪)
கேட்கத் தகாணாயெலாங் கேட்டுண் டுயிர்சுமந்துன்
னாட்சழிக்க வைத்தாய் நலமோ சனீச்சுரனே (௨௩௫)
இவ்வணமே நீணா ளிராட்டினம்போ னெஞ்சுழலி
னெவ்வணமியா னுய்வே னிறைவா சனீச்சுரனே (௨௩௬)
விட்டவுட னேனும் விமோசனமுண்டோவலது
முட்டவிது போலோ மொழிவாய் சனீச்சுரனே (௨௩௭)

மூத்தாணிற் கென்ன முறையாகு மில்லவளோ
ஆத்தாளக் காளோ வறியேன் சனீச்சுரனே (௨௩௮)
பிறவிநோ யாயுண்மறை பேசுநோ யும்மிவ்
வறுமைநோய்க் கீடாக மாட்டா சனீச்சுரனே (௨௩௯)
ஈடிலா மற்கடன்கேட் டேற்றலெலாம் யாசித்தற்
கீடெனவென் னுள்ள மிளைக்கும் சனீச்சுரனே (௨௪௰)
வன்மை மிகும்பஞ்ச மாகொடிய பாவியெலாம்
இன்மையெனும் பாவிக் கீடோசனீச்சுரனே (௨௪௧)
உண்ணிறையென் னுவிக் குடன்மேல் வெறுப்புவரப்
பண்ணினையா னிற்குப் பகையோ சனீச்சுரனே (௨௪௨)
ஊழைக் குறைக்க வுபாயமுள தேலதையிவ்
வேழைக் குரைசெய் திடுவாய் சனீச்சுரனே (௨௪௩)
அக்கினிமென் மேலு மழற்றுதலான் மந்தமின்ன
திக்கிலுள தென்று தெரியேன் சனீச்சுரனே (௨௪௫)
வெளிப்படா வண்ணம் விதவைகருப் பத்தை
யொளிப்பதுபோல் வாழ்க்கைசெய லுற்றேன் சனீச்சுரனே (௨௪௬)
சொற்பனம்பல் லிச்சகுனந் தும்மற் பயன்களெலாஞ்
சொற்பனமே யென்னளவென் சொல்வேன் சனீச்சுரனே (௨௪௭)
செல்லுமிடந் தோறுஞ் சிதம்பரமே செல்வமது
ஒல்லுமிட மெவ்விடமெற் கோதாய் சனீச்சுரனே (௨௪௮)
கன்மனேன் சென்மமுதற் கஷ்டமிதைப் போலறியேன்
வன்மமின்னு மெத்தனைநாள் வைப்பாய் சனீச்சுரனே (௨௪௯)
மிகமுனிவுண் டாமிடத்தின் மேவிநிற்றல் சந்தோஷஞ்
சகசமெனச் சொல்வார் தயாளா சனீச்சுரனே (௨௫௰)
வெம்மட்ட மத்தைவிட்டு மீளுமுன்னிவ் வேழையைநீ
யிம்மட்டோ டேவிடின்மிக் கின்பே சனீச்சுரனே (௨௫௧)
கூயிரங்கு மென்பொருட்டிக் கூவிரங்கு மாவிரங்கும்
பேயிரங்கு நீயிரங்கல் பீடோ சனீச்சுரனே (௨௫௨)

தஞ்சநீ யேயென்றுன் றாளடைந்த வென்மீதிற்
நெஞ்சமே னுங்கிருபை கூராய் சனீச்சுரனே (௨௫௩)
அல்லும் பகலு மநுதினமு மென்குறைநிற்
சொல்லுவதல் லாலெவர்பாற் சொன்னேன் சனீச்சுரனே (௨௫௪)
வஞ்சமா பாதகர்க்கும் மன்னிப்புண் டென்பொருட்டுன்
னெஞ்சமிரங் காதென்ன நீதம் சனீச்சரனே (௨௫௫)
கல்லோ விரும்போ கடும்வயிரக் குன்றோவென்
கொல்லோநின் சித்தமதைக் கூறாய் சனீச்சுரனே (௨௫௬)
உத்தியோக க்கடுமைக் கொத்ததுபோ லேகடின
சித்தமுனக் குற்றதெங்க டமை சனீச்சுரனே (௨௫௭)
முக்கான்முன் னென்பான் முறையிடுதே லுன்செவியிற்
புக்காத தெம்முடைய புண்யம் சனீச்சுரனே (௨௫௮)
சொல்லவரு மிந்நாளிற் றுட்டனா னேனுனக்கு
நல்லவனா னவதெந்த நாளோ சனீச்சுரனே (௨௫௯)
பசுபார்க்கக் கன்றைப் பழிவாங்கல் போலென்
சிசுக்க ளுயிர்க்கிறுதிசெய்யேல் சனீச்சுரனே (௨௬௰)
தாய்க்குபின் றாரமெனச் சாற்றுமொழி போலெனக்கு
வாய்த்தவளை யிந்நாளில் மாய்க்கேல் சனீச்சுரனே (௨௬௧)
இல்வாழ்க்கை யென்பகள்போ யில்வாழ்க்கை செய்வதெலா
மில்வாழ்க்கை யன்றிப்பே றென்னோ சனீச்சுரனே (௨௬௨)
எட்டகத்தில் வக்கரிக்கி லின்னுமென்ன செய்வையோவென்
றுட்டளர்ந்து நெட்டுயிர்ப்போ டிற்றேன் சனீச்சுரனே (௨௬௩)
புத்திக்கு மாறாட்டம் புக்கினதாலென் றனக்கும்
பித்தனுக்குஞ் சற்றுமுண்டோ பேதம் சனீச்சுரனே (௨௬௪)
காற்றாடியோமட் கலத்திகிரியோவென் றுந்
தேற்றவிலை யென்னறிவு சுற்றல் சனீச்சுரனே (௨௬௫)
வலைக்குள் ளகப்பட்ட மான்போனீ செய்க
வலைக்குளகப் பட்டேனின் மைந்தன் சனீச்சுரனே (௨௬௬)

தனக்கிளர்ச்சி யற்றாலுந் தாழ்வடையா வென்றன்
மனக்கிளர்ச்சி யற்றதென்ன மாயம் சனீச்சுரனே (௨௬௭)
கெட்டநெஞ்சை யானென்ன கெட்டிசெய்தா லுஞ்சேற்றி
னட்டகம்பம் போல நழுவும் சனீச்சுரனே (௨௬௮)
உச்சாசத் தென்னுளத்தை யூன்றவரும் ஞானிகளுக்
கிச்சைதடுத் தற்போல இன்னல் சனீச்சுரனே (௨௬௯)
காட்டிமீட் காமலெனைக் கண்ணிற் றுரும்பைவிட்டிங்
காட்டினது போதும்பொறே னையா சனீச்சுரனே (௨௭௰)
போர்வைபூண் டோர்க்கூதை போகாது போன்மானத்
தார்வமுடை யார்க்கிடர்போ காதோ சனீச்சுரனே (௨௭௧)
கண்டவர்க்கு மேனியனுக் காலங் கழித்தானை
யுண்டவிள வின்கனியை யொத்தேன் சனீச்சுரனே (௨௭௨)
எட்டிவிதை யுண்பவர்க்கே றுதுவிடம் போலுலுத்த
மட்டிகட்கெய் தாதோநின் வாதைசனீச்சுரனே (௨௭௩)
தொழுதுணைத்தும் போக்கிலையென் றன்பமினி வாய்விட்
டழுதுணைத்தாற் போமோ வறியேன் சனீச்சுரனே (௨௭௪)
கத்தாநீ தொட்டவர்கள் கண்ணிப்பி யாவருக்கு
முத்தாரத் தோவுனக்கு மோகம் சனீச்சுரனே (௨௭௫)
வேண்டாமென் மேலிவ் விரோத மொழித்தருள்வா
யாண்டானீ யானுன் னடிமை சனீச்சுரனே (௨௭௬)
கும்பிட்ட கையைக் குறைப்பாருண் டோவுலகில்
வம்பிட்டே னென்றும் மதியேல் சனீச்சுரனே (௨௭௭)
ஆக்க மழிந்திடிலோ ரற்றத்தி லெய்திடுமென்
னூக்க மழிந்திடிலென் றுண்டாம் சனீச்சுரனே (௨௭௮)
என்னுளமு மின்னுயிரு மன்னுணர்வு நின்னிடரில்
நன்னுதலார் மின்னிடைபோ னைந்த சனீச்சுரனே (௨௭௯)
ஏர்த்திடொணா தோசெவியி லேழைகுறை தீரமுகம்
பார்த்திடொணா தோமாறு பாவா சனீச்சுரனே (௨௮௰)

அல்லற் கடலினிடை யாழ்ந்தேனை யுன்கருணைச்
செல்வக் கரையிலென்று சேர்ப்பாய் சனீச்சுரனே (௨௮௧)
சஞ்சலங்க டீர்க்கத் தரும்பிரா னீயலதிங்
கஞ்சலென்று சொல்லவெனக்கி யாவர் சனீச்சுரனே (௨௮௨)
உற்றுறு மென்னிடநீ யுற்றநா டொட்டுபெய
னற்றதரு வென்னமதிப்பற்றார் சனீச்சுரனே (௨௮௩)
கெஞ்சி நடந்தவில்லாள் கேவலமா யெண்ணுவளென்
றஞ்சி நடந்துவர லானேன் சனீச்சுரனே (௨௮௪)
முன்னாளி லேநனிகர் மொய்த்திருப்பா ரென்னிடத்தி
லின்னாளென் போல்வாரோ யீட்டம் சனீச்சுரனே (௨௮௫)
சக்கரத்தொவ் வோர்மனை நீதாண்டுதல்போ லேபலவில்
புக்கவெனைச் செய்ததினிப் போதும் சனீச்சுரனே (௨௮௬)
புத்திரனுக் கேழையாய்ப் போனபின்னெற் கட்டமிப்
பத்துவரு டந்தொடங்கிப் பாடே சனீச்சுரனே (௨௮௭)
பெற்றவள்பா லோநெஞ்சை பிள்ளைக் குதவவெண்ணின்
மற்றவரான் மாற்ற வசமோ சனீச்சுரனே (௨௮௮)
தீங்குநீ செய்யத் திருவுள்ளத் தெண்ணிடிலோ
தாங்குதற்கு மென்னாற் றரமோ சனீச்சுரனே (௨௮௯)
சிற்றெறும்பை வாதிக்கச் சிங்க முயன்றதற்கே
வுற்றெனைநீ வாதித்த லொக்கும் சனீச்சுரனே (௨௯௰)
தீயனேன் றானுனக்குச் செய்திருந்தேன் குற்றமென்றன்
சேய்மனைவி யாதுகுற்றஞ் செய்தார் சனீச்சுரனே (௨௯௧)
எம்மைப் பலவிதமா யிம்சிப்ப தும்மறமா
தம்மருட்கும் ஒப்பத் தகுமா சனீச்சுரனே (௨௯௨)
இனியாதே னுந்துன் பியற்றிடிலெந்தோஷம்
அனியாய மாயுனைவந் தாருஞ் சனீச்சுரனே (௨௯௩)
மாமதிக்கோன் பாணிடநீ வந்தாற் கருணையுண்டாய்
க்ஷேமமுறச் செய்தனிரா ட்சேபம் சனீச்சுரனே (௨௯௪)

அட்டியிலா துன்னா லழிந்தபொருட் கெல்லாம்பின்
வட்டியிட்ட வாயுன் வழக்கம் சனீச்சுரனே (௨௯௫)
சேரு முயிர்ப்பயிரை நின்சினத்தாற் றீத்தருளா
மாரிபிற்பெய் தாலென்னே வாய்க்குஞ் சனீச்சுரனே (௨௯௬)
நாதனே நீயென்றுன் றாண்மலர்த்தாணம்புமிவ்வ
நாதனைச்சோ தித்தலின்னு நன்றோ சனீச்சுரனே (௨௯௭)
புண்ணியநீ யீச்சுரப்பேர் பூண்டிருந்துஞ் சீவகா
ருண்ணியமே னின்பா லொழிந்த சனீச்சுரனே (௨௯௮)
துன்பமுற்றோர் தங்க டுயர்கேட்டுங் காவாயே
னின்பெருமைக் கென்னோ நிலைமை சனீச்சுரனே (௨௯௯)
என்முகம்பார்த் தாள்வ தினியெனினு மென்பாலர்
தன்முகம்பார்த் தேனுந் தயைசெய்சனீச்சுரனே (௩௦௦)
பால்குடிக்குஞ் சேய்பொருட்டுன் பட்சமுண்டா மென்றுமனப்
பால்குடித்துச் சேமமெதிர்ப் பார்த்தேன் சனீச்சுரனே (௩௦௧)
பட்சமுன தெற்சமர பட்சமலா னற்பூர்வ
பட்சமதை யெக்காலம் பார்ப்பேன் சனீச்சுரனே (௩௦௨)
வாடினா ளுந்திகைத்தன் மாறுமென விந்நூலைப்
பாடினேன் கேட்டுதயை பண்ணாய்சனீச்சுரனே (௩௦௩)
எவ்வெவ் விதவிடரி லீர்த்திடினு மென்னுடல
மவ்வவ் விடர்க்கு மமைந்த சனீச்சுரனே (௩௦௪)
நீயெனைத்தொட் டாட்டும்விதம் நீண்டநா ளைக்குமுன்பெண்
ணாயகிக்குச் சொல்லிவைத் தேனன்றாய் சனீச்சுரனே (௩௦௫)
நற்பா ரியுமொருநாள் நானுரைத்த சொல்லைமறந்
தொப்பாரி கூறியழு தோய்ந்தாள்சனீச்சுரனே (௩௦௬)
பூனைபுறிற் கிள்ளைமொழி போயொளித்தல் போற்பேதா
யேனையுற்றா யென்மொழியி லென்றேன் சனீச்சுரனே (௩௦௭)
பின்னுஞ் சனீசப் பிரபுசெய லீதெனவுள்
ளுன்னுதலற் றாயென் றுறுத்தேன் சனீச்சுரனே (௩௦௮)

கஷ்டங்கட் கெல்லாநீ காரணமென் றோர்ந்துபின்பென்
கஷ்டத்திற் பாதி கவர்ந்தாள் சனீச்சுரனே (௯0௯)
என்றார மும்முனைப்போ வின்னல்செயிற் றீயொடுகோற்
றென்றாகக் கூடினதற் கோப்பாம் சனீச்சுரனே (௯0௰)
மங்குசனி பொங்குசனி மாரணஞ்செய் யுஞ்சனிப்பேர்
தங்குசனி யெல்லாநீ தானே சனீச்சுரனே (௯௧௧)
இன்றுமுத னின்பெயர்பு கன்றவர்பா லும்மணுகே
னென்றுநளற் கன்றுரைத்த தின்றோ சனீச்சுரனே (௯௧௨)
அடனளன்சீர்க் காதைபல்கா லாய்ந்துரைக்கு மென்னைத்
தொடவுனக்கு ஞாயமுண்டோ சொல்லாய் சனீச்சுரனே (௯௧௩)
பொன்னுரைநேர் நின்னுரையும் பொய்யுரையா ப்போகுமெனி
னென்னுரைசெய் வன்னுரைநீ யெந்தாய் சனீச்சுரனே (௯௧௪)
சாட்சிக்கா ரன்றாளிற் றாழ்தலினுஞ் சண்டையன்றாண்
மாட்சிமையா மென்ன மதித்தேன் சனீச்சுரனே (௯௧௫)
மற்றபல தேவை வணங்குவதை விட்டுன்றே
லூற்றதுயர்க் குன்கழலே யுற்றேன் சனீச்சுரனே (௯௧௬)
அரனயன்மா லோரையுந்தொட் டாட்டிவைக்கத் தக்க
வரமெவர்பாற் பெற்றனையோ மாயா சனீச்சுரனே (௯௧௭)
பிரமமென்ப தன்னிடநீ பெற்றவதி காரக்
கிரமமீ தென்ன வெண்ணு கின்றேன் சனீச்சுரனே (௯௧௮)
எத்தேவை யெண்ணி யிறைஞ்சிடினுந் தொண்டர்கண்முன்
னத்தேவாய் வந்தங் கருள்வாய் சனீச்சுரனே (௯௧௯)
பித்துலக நின்னாற் பெறுஞ்சுகத்தைப் பேசாது
தொத்திடிற்சற் றல்லலுனைத் தூற்றுஞ் சனீச்சுரனே (௯௨௰)
மாசகலத் தூசை வறுத்துதல்போ லென்னிதய
மாசகலத் துன்பம் வகுத்தாய் சனீச்சுரனே (௯௨௧)
அழுக்ககற்றி யாடையிற்சா யங்கொடுத்தல் போலென்
னிழுக்ககற்றி நல்லுணர்வை யீந்தாய் சனீச்சுரனே (௯௨௨)

இகலிழைத்து நல்லறிவை யீந்தநிற்கியான் செய்யத்
தகுவதொன்றில் என்றுமுனைத் தாழ்வேன் சனீச்சுரனே (௩௨௩)
நீயுலகின் மாந்தனாச்செய் நிஷ்டூரத்தை நோக்கிடினா
ருயிரத்தோர் பங்கெனதா காதே சனீச்சுரனே (௩௨௪)
தேவாநீ யென்னளவுஞ் செய்திருக்கு நன்மைபற்றி
யோவாமற் பூசித் துவப்பேன் சனீச்சுரனே (௩௨௫)
சீலத்தை யும்முனது செய்கையையு மோராதென்
காலத்தை வீணே கழித்தேன் சனீச்சுரனே (௩௨௬)
நந்தாத கோட்களுக்கு நாயகமே நோய்முகமே
யெந்தாயே யாயுட் கிறையே சனீச்சுரனே (௩௨௭)
கொடியவினைப் பைங்கூழ் குறைவறவே யோங்கி
நெடிதாய் வளரு நிலமே சனீச்சுரரன (௩௨௮)
மண்ணே புனல்தீகால் வானேயென் றேத்திடுவார்
கண்ணே கருணைக் கடலே சனீச்சுரனே (௩௨௯)
ஆறு குணத்தை யகற்று ந்தனிமுதலே
மாறுபா டேற்றிடுநோ வாயே சனீச்சுரனே (௩௩௰)
நின்று ளிணையை நினைந்துருகுந் தொண்டர்கண்மேற்
குன்று தயாளகுணக் குன்றே சனீச்சுரனே (௩௩௧)
என்பே கரைந்துருக வென்னறிவி னூடமர்ந்த
வன்பே சுவையா ரமுதே சனீச்சுரனே (௩௩௨)
ஆற்றொணு நோய்ப்பகைவர்க் காளாகு மெற்கதனை
மாற்றிவைக்க வந்த மருந்தே சனீச்சுரனே (௩௩௩)
பழிக்கும் படர்களுக்கும் பற்றற்று ச்செல்லும்
வழிக்குங்கை காட்டி மரமே சனீச்சுரனே (௩௩௪
இலறைவாழ் வென்னு மிருளிலகப் பட்டவர்கள்
வெல்லவரு ஞான விளக்கே சனீச்சுரனே (௩௩௫)
குவலயத்தில் நிசெய் கொடுமையினுற் சாலக்
கவலையுற்றே ருண்ணுங் கனியே சனீச்சுரனே (௩௩௬)

எண்ணின வெண்ணமெலா மீந்துவிடாய் தீர்க்கவென்றன்
கண்ணின்முன்னே நின்ற கரும்பே சனீச்சுரனே (௩௩௭)
அடியார்க ளுன்னை யருச்சித்து வேண்டும்
படியளிக்கும் வான்கற் பகமே சனீச்சரனே (௩௩௮)
சிந்தா மணியே செழுநிதியே தேனுவே
முந்தாக் கொடைசான் முகிலே சனீச்சுரனே (௩௩௯)
பூமணியே யன்பர் புகழ்மணியே கார்மணியே
மாமணியே யென்கண் மணியே சனீச்சுரனே (௩௪௰)
நீடுலகிற் குன்றாத நின்சீர்த்தி யைப்பலரும்
பாடுதற்குப் பேராசைப் பட்டேன் சனீச்சுரனே (௩௪௧)
தேனே சுவைத்திரளே தெள்ளமுதே பாகேயெங்
கோனே தடுத்தாட் குருவே சனீச்சுரனே (௩௪௨)
நினைத்தா லுருவெளியாய் நிற்கின்றாய் கண்முன்
னுனைத்தான் மறவாதென் னுள்ளம் சனீச்சுரனே (௩௪௩)
யாக்கை பொருளாவி யாவுமுனக் கீந்தவென்னைக்
சாக்கைக் கடவுணீ காப்பாய் சனீச்சுரனே (௩௪௪)
வீற்றிருக்கு நின்கொலுவில் விண்ணோருங் கைகூப்பி
போற்றிஜெய போற்றியென்பார் போற்றீ சனீச்சுரனே (௩௪௫)
தொண்டர்குழாந் தெண்டனிட்டே தோத்திரங்கள பாடிடவும்
அண்டர்மட வார்நடன மங்காம் சனீச்சுரனே (௩௪௬)
சேளிலங்கு நாகக் கிரீடமிலங் கும்பணைத்த
தோளிலங்கும் விட்சித் தொடையல் சனீச்சுரனே (௩௪௭
சூடிவரு நின்புகழைச் சொல்லிவரும் பேர்க்கின்பந்
தேடிவருஞ் சீருடனே செல்வம் சனீச்சுரனே (௩௪௮)
காந்தியுறு நின்வடிவைக் கண்ணுறும்பேர்க் கின்புறுநற்
சாந்தியுறு ஞானமுறுந் தாமே சனீச்சுரனே (௩௪௯)
புத்திதருஞ் வித்தைதரும் பூமிதரு நின்னருள்சேர்
பத்திதருஞ் சித்திதரும் பண்பா சனீச்சுரனே (௩௫௰)

கடைவாரந் தோறுமுனைக் கண்டுதரி சிப்போர்க்
கிடையூறென் றொன்றுமிலை யென்பார் சனீச்சுரனே (௯௰௧)

மண்டலமேழ் திபமட்டும் வைத்திடுவோர் சிந்தைதனிற்
கொண்டவெண்ண மெல்லாங்கை கூடும் சனீச்சுரனே (௯௰௨)

அபிஷேக நைவேத்ய மர்ச்சனைசெய் துன்பேர்
செபஞ்செயிலோ ராண்டெட்டுஞ் செங்கோல் சனீச்சுரனே (௯௰௩)

பத்தியுட னிந்நூலைப் பாடினோர்கேட் போர்களிஷ்ட
சித்திபெற்று வாழ்வார்க டிண்ணம் சனீச்சுரனே (௯௰௪)

சிந்திப் பவர்களுநின் சீரடியைச் சென்னியுற
வந்திப் பவர்களெலாம் வாழி சனீச்சுரனே. (௯௰௫)

## சனீச்சுரத்தோத்திரக்கண்ணி
முற்றிற்று.

---

சிவமயம்.

## சனீஸ்வரர்பேரில்

அறு சீர்க்கழி நெடிலடி விருத்தம்,

திருத்தாண்டகம்போற்பாடிக்கொள்க.

கதிர்மகனை மந்தனைக்கோ னுச்சத்தானைக்
கரியவனைச் சௌரியனைக் காரியானை
முதுமகனை நீலனைப்பேற் கோளானைநோய்
முகவனைவெங் கலியவனை முடவன்றன்னை

மதிமகனைப் பெருநட்பாக் கொண்டுளானை
மகரகும்ப மாட்சியனை வையமேத்தித்
துதிமனைத் துதிப்பவரைத் தொடமாட்டானைத்
துதியாத நாளெல்லாஞ் சுகமின்றுளே. (௧)

அணியானை நிறத்தானை யாற்றலானை
அகில்சரா சரமனைத்து மமர்ந்தானைப்பேர்
இணியானைத் தேவர்முத லொப்பிலானைத்
திருநள்ளா றகலானைத் தீங்கினின்றுந்
தணியனைச் சித்தெட்டு மாடுவானைத்
தக்கோனை மிக்கோனைச் சார்கரும்பொற்
பணியானைப் பணிக்ரீடம் பரித்திட்டானைப்
பணியாத நாளெல்லாம் பகையாம்நாளே. (௨)

ஆண்டானை யெவரையும்போய்ப் பற்றுவானை
அவரவர்செய் வினையளவி லாட்டுவானை
மூண்டானைத் தமர்பிறரா முறையிலானை
முடியாத கருமமெலா முடிப்பானைச்சீர்
வேண்டானை விசுவமய மாயினானை
வேண்டினைத் தாழ்த்தானை மெய்மையன்பு
பூண்டானைப் பூண்டயங்கு மார்பினானைப்
போற்றாத நாளெல்லாம் போவிநாளே. (௩)

எடுப்பானை யாலயங்க டோறுந்தங்கி
யிருப்பானை யேத்திடுவார்க் கிராஜயோகங்
கொடுப்பானைக் குற்றத்துட் படுத்துவானைக்
கொலைமூட்டி விடுப்பானைக் கொலையினின்றுந்
தடுப்பானைக் கடுகளவுந் தயையிலானைத்
தறுகணனை யுறுகணனைச் சமையம்போற்கிட்
படுப்பானைப் பலதுயரும் படுத்துவானைப்
பாடாத நாளெல்லாம் பாழாம்நாளே. (௪)

அருவானை யருவமன்றி யாண்பெண்ணானை
அலியானை ச்சலியானை யளவிலாத
வுருவானை யுணர்வானை யுயர்வுள்ளானை
யொழியாத தொழிலானை யுயருந்தான்றித்
தருவானைச் சாற்றரிய சமர்த்துள்ளானைத்
தன்னரசு செலுங்காலந் தன்னைநோக்கி
வருவானை வருத்திப்பின் னருள்செய்வானை
வணங்காத நாளெல்லாம் வழுவாம்நாளே. (௫)

உலகமெலாம் பொதுவறவேபுரப்பாய்நீயே
வுயர்தான்றி மரமீதி லுறைவாய்நீயே
பலகலைக ளெடுத்துரைக்கும் பரனுநீயே
பசுபாச மகற்றிவைக்கும் பதியுநீயே
அலகில்சுகங் கொடுத்தருளு மையநீயே
அத்துவித நிலைகாட்டு மறிவுநீயே
கலகமெலாம் விளைத்தாட்டுங் கருத்தனீயே
காகவா கனத்தேறுங் கடவுணீயே. (௬)

தனமேயென் தாதாவே தாயேதாதை
சற்குருவே கடவுளே தருவேயெண்ணும்
மனமேயென் வாக்கேநல் வாக்குக்கெட்டா
வாசாம கோசரமே மதியேவானோர்
கனமேநீங் காக்கருணைக் கடலேகண்ணிற்
காணருமா ருயிரேயென் றன்னையேத்தித்
தினமேவந் திப்பவர்பாற் சேராமற்கா
திருநள்ளாற் றரன்றளியிற் றிகழுந்தேவே. (௭)

திருமுடிமே லரவமுடி திகழ்ந்துதோன்றுஞ்
சீர்நுதலிற் செந்தூரத் திலதந்தோன்றும்
ஒருவிழியிற் கருணைவழிந் தொழுகித்தோன்றும்
ஒருவிழிகோ பக்கனலை யுகுத்துத்தோன்றும்

இருசெவியி னீலமணிக் குழைகடோன்றும்
எழின்மார்பி லிரும்பார மிலகித்தோன்றுந்
தருகரத்திற் கடகமுநாற் படைகடோன்றுஞ்
சரண்புகுவார்க் கெதிர்தோன்றுஞ் சனீச்சுரற்கே. (அ)

வளமருவு மேற்குலத்தற் பவித்தோரோனும்
வாதமொடெண் சித்திகற்ற வல்லாரோனும்
அளகேச னிகர்செல்வம படைத்தோரோனும்
அகிலமெலா மொருகுடைக்கீ ழாள்வோரோனுந்
தளருவா ரவர்புகழை நிலை யென்றுன்னோந்
தான்றிவிருட் சத்தின்கீழ் தனித்துமுன்னாள்
நளபதிக்கு வாக்களித்தோர்க் கடியாராயில்
அவராகும் நாந்துதிக்கு நாதனுரே. (௯)

சனிவாரந் திரிகரண சுத்தியாகச்
சௌரீசர் சந்நிதியிற் றீபமேற்றிக்
கனிவோடபி ஷேகநிவே தனமுஞ்செய்து
கருந்தாளம் பிகைக்கியைந்த கணவாவென்றுந்
தனியுடையார் மீதிலருள் புரிவாயென்றுந்
துயர்மாற்றிச் சுகங்கொடுக்குந் துரையேயென்றும்
பனிமலர்கொண் டருச்சிப்பார் கண்களாலே
பங்கீசன் திருவுருவைப் பார்க்கலாமே. (௰)

## திருவாரூர் பண்-இசை

இரவிசே யாயுனை யெண்ணலே னண்ணலேன்
அரவின்வாய்த் தேரைபோ லாயினே னாயினேன்
பரவுவார்க் கேயருள் பண்ணுவா யெண்ணுவாய்
விரவுமின் வாதையை விட்டுவா ரோட்டுவாய்

# சனீச்சுரர் அறுசீர்க்கழி நெடிலடி விருத்தம்.

தேவாரம்போற்பாடிக்கொள்க.

௧. சாடுநின் கோபக்கோடை தனைச்சகித் திடமாட்டாமல்
வாடுறும் பைங்கூழன்ன மாந்தருண் மெலிவுநோக்கிப்
பீடுறுங் கருணைமாரி பெய்துகாப் பாயென்றுனைப்
பாடுவோர் தம்மைச்சனீசா பற்றிடா தருள்செய்வாயே.

௨. கந்தனை யானைமாலைக் கணேசனைச் சனிசாபாடி
வந்தனை செயினுநின்னால் வந்ததுன் பகன்றதில்லை
யுந்தனைக் கொண்டுண்டான வூறுபா டகலநின்னைச்
சிந்தனை செயத்தக்கோரைத் தீண்டிடா தருள்செய்வாயே.

௩. கதித்திடுந் தேவர்க்கெல்லாங் கண்களாற் காணுந்தேவர்
உதித்திடு நவக்கோளாமவ் வொன்பது பேர்க்குமேய
விதித்திடு மேன்மையின்பம் விளைத்திடு மிறையென்றுனைத்
துதித்திடு மடியார்தம்மைத் தொட்டிடா தருள்சனீசா.

௪. படியினி லுனையல்லாது பற்றுவே றின்றிவாடுங்
கொடியனேன் குற்றமெல்லாங் குணமெனக்கொண்டுன்செய்ய
அடியிணை மலரைப்பாடு மருள்கொடுத் தல்லனீக்கிச்
செடியனைத் தடுத்தாட்கொள்ளுந் திருவுளா முடையகோவே.

௫. அண்டரிற் பண்டாய்போற்றி யடியவர்க் கரணேபோற்றி
தொண்டரை யண்டாய்போற்றித் தோத்திரப் பிரியாபோற்றி
மிண்டரைக் கொண்டாய்போற்றி விரும்பியதருள்வாய்போற்றி
சண்டவுத் தண்டாபோற்றி சனீச்சுரா போற்றிபோற்றி.

சனீச்சுரர் அறுசீர்க்கழி நெடிலடி விருத்தம்

முற்றிற்று.